**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு**

**MODEL PAPER**

**அழகுக்கலை நிபுணர் (Beautician) – NVQ மட்டம் 4**

**நேரம்: 02 மணித்தியாலங்கள்**

**விடையளிப்பதற்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும்**

- நீர் இவ் வினா பத்திரத்தின் பகுதி A, B மற்றும் C ஆகியவற்றில் தரப்பட்டுள்ள அனைத்து வினாக்களிற்கும் விடையளித்தல் வேண்டும்.
- இவ் வினா பத்திரமானது பல்தேர்வு வினாக்கள், குறும் விடை வினாக்கள் மற்றும் இணைத்தல் வினாக்கள் ஆகியவற்றினை கொண்டுள்ளது.
- பல்தேர்வு வினாவானது நான்கு விடைகளை கொண்டுள்ளதுடன் மிகப் பொருத்தமான விடையினை தேர்வுசெய்து உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளிலுள்ள பொருத்தமான கூட்டினுள் “X” என்ற அடையாளத்தினை இடவும்.
- பகுதி B மற்றும் C ஆகியவற்றிற்கு இவ் வினாத்தாளிலேயே விடையளிக்கவும்.
- இவ் வினாப்பத்திரமானது 11 பக்கங்களை கொண்டுள்ளது.

**பகுதி A**

1. அழகுக்கலை நிலையமொன்றில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளிற்கு காரணமாக அமைவது, முகாமைத்துவத்தின் கீழ்வரும் எதனாலாகும்?
   a. அனுபவமின்மை
   b. ஒத்துழைப்பின்மை
   c. வினைத்திறனின்மை
   d. பயிற்சியின்மை

2. அழகுக்கலை நிலையமொன்றில் வழங்கப்படுகின்ற சேவைகளை முன்பதிவு செய்யும் புத்தகம் (Appointment book) பேணப்படவேண்டியதன் அவசியம் யாது?
   a. வாடிக்கையாளர்களை அசௌகரியத்திற்கு உட்படுத்தல்
   b. மூலப்பொருட்களிற்கான ஓடர்களை வழங்குதல்
   c. வாடிக்கையாளரிற்கு உரிய நேரத்தினை ஒதுக்குதல்
   d. நாகரீகத்தினை தீர்மானித்தல்

3. தொலைபேசியூடாக ஏதாவது முறைப்பாடு ஒன்றினை சரிசெய்யும் போது சாமர்த்தியம், மரியாதை என்பவற்றுடன் பின்வருவனவற்றுள் எதனை பயன்படுத்துவது முக்கியமானதாகும்.
   a. சண்டையிடுதல்
   b. சுய கட்டுப்பாடு
   c. இடையூறு செய்தல்
   d. பொறுமை இழத்தல்

4. ஓர் அழகுக்கலை நிபுணர் எப்போதும் முதலில் கருத்திற்கொள்ளவேண்டிய விடயமாக காணப்படுவது
   a. அறவிடப்படவேண்டிய கட்டணம்
   b. வாடிக்கையாளரின் பாதுகாப்பு
   c. நேரத்தினை உரிய முறையில் பயன்படுத்துதல்

d. வாடிக்கையாளரினால் வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவுகள்

5. நோயினை ஏற்படுத்தக்கூடிய பக்ரீரியாக்கள் (Pathogenic Bacteria) பொதுவாக அழைக்கப்படுவது
   a. கிருமி கொல்லிகள்
   b. தொற்றுநீக்கிகள்
   c. கிருமிகள் அல்லது நுண்ணங்கிகள்
   d. நன்மை பயக்கும் பக்ரீரியாக்கள்

6. அழகுக்கலை நிலையத்திற்கு வாடிக்கையாளர்களை மீளவும் வரவழைப்பதற்கு அதிகம் பங்களிப்பு செய்யும் தனிப்பட்ட காரணியாக விளங்குவது அழகுக்கலை நிபுணரின் பின்வரும் இயல்புகளுள் எது?
   a. சண்டையிடுதல்
   b. நட்புறவினை ஏற்படுத்தல்
   c. வம்பு பேசுதல்
   d. ஆளுமை விருத்தி

7. அழகுக்கலை நிலையம் ஒன்றில் வழங்கல்களை சரியாகவும் மற்றும் வினைத்திறன்மிக்கதாகவும் பேணும் பொருட்டு அவசியமாக காணப்படுவது பின்வருவனவற்றுள் எது?
   a. பொருட் பதிவேட்டு முறைமையினை பேணுதல்
   b. விலை கோரல் பத்திரம்
   c. விற்பனை ஆற்றல்
   d. தேய்மான பதிவேட்டினை பேணுதல்

8. pH பெறுமானம் 10 ஆகவுள்ள ஒரு கலவையானது,?
   a. அமில கலவை
   b. உப்பு கரைசல்
   c. ஒட்சைட்
   d. அல்கலைன் கலவை

9. பின்வருவனவற்றுள் எக்காரணத்தின் பொருட்டு அழகுக்கலை நிலையம் ஒன்றின் சுகாதாரத்தினை எப்போதும் பேணவேண்டி உள்ளது?
   a. அழகுக்கலை நிலையத்தில் சிறந்த வாசனையினை ஏற்படுத்துவதற்கு
   b. பக்க விளைவுகள் ஏற்கடக்கூடிய சூழ்நிலையினை குறைப்பதற்கு
   c. அழகுக்கலை நிபுணர் பிஸியாக இருப்பதற்கு
   d. வாடிக்கையாளரினால் வரவேற்கத்தக்க சூழலினை ஏற்படுத்துவதற்கு

10. தொற்றுநீக்கப்பட்ட கியூடிக்கிள் நிப்பர் ஒன்றினை (cuticle nippers) கிருமி நீக்கம் செய்யப்பட்ட நிலைமையில் வைத்திருக்க வேண்டுமாயின் பின்வருவனற்றுள் எதனை பயன்படுத்துவது சிறந்ததாகும்?
   a. குவாட்டினறி அமோனியம் கலவையினை (Quaterny ammonium compounds - QUATS) பிரயோகித்தல்
   b. ஓட்டோ கிளேவ் (Autoclave) இனுள் வைத்தல்
   c. யூ. வி. கபினட் (UV cabinet) இனுள் வைத்தல்
   d. சேர்ஜிகல் ஸ்பிரிட் (Surgical Sprit) இனை பிரயோகித்தல்

11. வாய்மூலம் அல்லாத தொடர்பாடல் முறைமையாவது பின்னவருவனவற்றுள் எது?
    a. விளக்கமளித்தல்
    b. ஆலோசனை வழங்குதல்
    c. கலந்துரையாடல்
    d. கண் மூலமான தொடர்பு

12. "சுய- அபிவிருத்தி" என்பதனால் கருதப்படுவது யாது?
    a. பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபெறல்
    b. எதனை செய்ய வேண்டும் என யாரும் ஒருவர் அறிவுறுத்தும் வரை காத்திருத்தல்
    c. தேடிப்பார்த்து வேலைகளில் ஈடுபடல்
    d. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு புதிய விடயம் ஒன்றினை மேற்கொள்வதற்கு கற்றுக்கொள்ளல்

13. தனிப்பட்ட சுகாதாரத்தினை சிறந்த முறையில் பேணுவதன் மூலம்?
    a. தனிநபர் நலன்கள் பாதுகாக்கப்படும்
    b. சமூக நலன்கள் பாதுகாக்கப்படும்
    c. நகரத்தின் நலன்கள் பாதுகாக்கப்படும்
    d. சமுதாயத்தின் நலன்கள் பாதுகாக்கப்படும்

14. ஒர் பிரகாசமற்ற வெளிறிய சருமமானது பின்வருவனவற்றுள எதன் விளைவாகும்?
    a. நோயற்ற நிலைமை
    b. சமச்சீர் உணவு கிடைக்காமை
    c. போதியளவான ஓய்வினை எடுக்காமை
    d. சுகாதாரமின்மை

15. பின்வருவனவற்றுள் எதனை தொடர்ச்சியாக பயன்படுத்துவதன் மூலம் ஒரு உடலினை சுத்தமாக வைத்திருக்க முடியும்?
    a. துர்நாற்ற நீக்கி (Deodorant)
    b. சவரக்காரம் மற்றம் நீர்
    c. தொற்று நீக்கி
    d. கிருமி கொல்லிகள்

16. இதயம், நாடிகள் மற்றும் சுரப்பிகள் என்பன கீழ்வருவனவற்றுள் எதனால் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன?
    a. ஓய்வு
    b. வேடிக்கை விநோதங்கள்
    c. வலுவான உணர்ச்சி வெளிப்பாடுகள்
    d. எதிர்பார்ப்பு

17. தோலின் வெளிப்புற பாதுகாப்புப்படை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
    a. டேர்மிஸ்
    b. கொழுப்பு இழையம்
    c. எபிடேர்மிஸ்
    d. சப்கியூட்டேனியஸ் இழையம்

18. அழகுக்கலை நிபுணர் மீண்டும் மீண்டும் வம்பு பேசுவதனால் வாடிக்கையாளர் இழப்பது?
    a. அவதானம்
    b. வசீகரம்
    c. நம்பிக்கை
    d. சரியான இருக்கை நிலை

19. பெடிகியூர் இனை மேற்கொள்ளும் போது மசாஜ் மற்றும் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டியது
    a. முழங்காலிற்கு
    b. கணுக்காலிற்கு
    c. முழங்காலிற்கும் கணுக்காலிற்கும் இடையில்
    d. முழங்காலிற்கும் தொடையிற்கும் (Thigh) இடையில்

20. நகத்தின் சுயாதீன முனைவிற்கு (free edge) கீழ் சுத்தம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் சாதனம்
    a. அரத்தினுடைய கூர் முனை
    b. அழுத்தியினுடைய (Pusher) கூர் முனை
    c. பஞ்சு முனையினை உடைய தோடை மர குச்சி
    d. ஏதாவது ஒரு கூரான சாதனம்

21. அழகுக்கலை நிலையமொன்றிற்கு வருகைதந்துள்ள நீரிழிவு நோயினையுடைய வாடிக்கையாளர் ஒருவருடைய இரண்டு பாதங்களிற்குமான சிகிச்சையினை மேற்கொள்ளும் போது பாதுகாப்பு நடவடிக்கையாக மேற்கொள்ளக்கூடாத செயற்பாடாவது
    a. நிகங்களை வெட்டுதல்
    b. நெயில் பயில் (Nail File) செய்தல்
    c. கியூடிகிள் இனை அகற்றுதல்
    d. படிகக்கல்லினை (Pumice Stone) பயன்படுத்துதல்

22. உலர் தோலிற்கான சிகிச்சையினை மேற்கொள்ளும் போது அழகுக்கலை நிபுணர் பின்வருவனவற்றுன் எதனை அதிக சதவீதத்தில் கொண்டுள்ள பொருட்களை பயன்படுத்துவதை தவிர்த்தல் வேண்டும்.
    a. வாழைப்பழம்
    b. நீர்
    c. எண்ணை
    d. மதுசாரம்

23. பின்வருவனவற்றுள் எதனை பிரயோகிப்பதனால் தோலிலுள்ள துளைகள் திறக்கின்றன.
    a. குளிர்ந்த, ஈரலிப்பான துவாய்கள்
    b. குளிர்ந்த, உலர்வான துவாய்கள்
    c. சூடான, ஈரலிப்பான துவாய்கள்
    d. சூடான, உலர்வான துவாய்கள்

24. மயிர் நீக்கும் தன்மையுள்ள இரசாயன பொருள் ஒன்றினை பயன்படுத்தும் போது அப் பகுதியினை சுற்றியுள்ள தோலானது எதன் மூலம் பாதுகாக்கப்படுகின்றது
    a. அஸ்ரின்ஜன்ட் லோஷன் (Astringent Lotion)
    b. மதுசாரத்தினால் தேய்த்தல்
    c. பெற்றோலியம் ஜெலி/ கிறீம்

d. சவரம் செய்வதற்கு முன்னர் பயன்படுத்தும் லோஷன்

25. வாய் மற்றும் நாடியினை சுற்றியுள்ள அநாவசியமான முடிகளை மிகச்சிறப்பாக அகற்றுவது
    a. ரிவீஷிங் (Tweezing) செய்தல்
    b. கிளிப்பிங் (Clipping) செய்தல்
    c. மேற்பரப்பினை பொசுக்குதல் (Singeing)
    d. சவரம் (Shaving) செய்தல்

26. கட்புருவ முடிகளை ரிவீஷிங் செய்ய வேண்டிய சரியான திசையாவது
    a. அவற்றின் வளர்ச்சி திசைக்கு எதிர்த்திசையில்
    b. அவற்றின் வளர்ச்சி திசையில்
    c. நாடியினை நோக்கி
    d. தலையோட்டினை நோக்கி

27. கட்புருவ முடிகளை ரிவீஷிங் செய்ததன் பின்னர் அஸ்ரின்ஜன்ட் லோஷனானது எதற்காக பயன்படுத்தப்படுகின்றது
    a. தோலிற்கு ஓய்வினை வழங்குவதற்கு
    b. தோல் சுருக்குவதற்கு
    c. தோலினை விரிவடைவதற்கு
    d. தோலினை தூண்டுவதற்கு

28. கண்களிற்கிடையிலான தூரம் அதிகமாக உள்ள தன்மையினை குறைத்துக்காட்டுவதற்கு பொருத்தமான முறையாவது

    a. இரண்டு பக்கத்திலுமுள்ள கட்புருவ கோடுகளை நேராக்குதல்
    b. கண்களின் இரு மூலைப்பகுதி வரையில் உள்ள கட்புருவ கோட்டினை நீட்டுதல்
    c. கட்புருவ கோட்டினை நேரானதாக்கல்
    d. கட்புருவ முடிவிடங்களை வளைத்தல்

29. கண்கள் நெருக்கமாக அமைந்துள்ள தன்மையினை சேய்மைப்படுத்திக் காட்டுவதற்கு

    a. கட்புருவங்கள் மற்றும் கண்கள் இடையிலான இடைவெளிகள் அதிகரிக்கப்படல் வேண்டும்
    b. கட்புருவங்கள் மற்றும் கண்கள் இடையிலான இடைவெளிகள் குறைக்கப்படல் வேண்டும்
    c. கண்களின் முடிவிடம் வரை கட்புருவங்கள் குறைக்கப்படல் வேண்டும்
    d. கண்களின் வெளிப்புற முடிவிடங்களிற்கு அப்பால் கட்புருவங்கள் நீட்டப்படல் வேண்டும்

30. கட்புருவங்களை வடிவமைக்கும் போது ஏற்படக்கூடிய தொற்றுக்களை தவிர்ப்பதற்கு பயன்படுத்தப்படுவது

    a. தொற்றுநீக்கி
    b. கிருமிகொல்லி
    c. துர்நாற்ற நீக்கி
    d. பவுடர்

## <u>பகுதி B</u>

**வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள இடைவெளிகளில் விடைகளை எழுதவும்**

1. மனிக்கியூர் ஒன்றினை மேற்கொள்ளும்போது அதற்கான உபகரணங்கள் எங்கே பேணப்படல் வேண்டும்?

2. அதிகளவிலான இயற்கை விளைவிற்கு ஏற்றவாறான நகத்தின் வடிவம் எதுவாக இருக்கவேண்டும்?

3. கால் விரல்களிற்கிடையில் ஏற்படும் நீர்த்தன்மையான கொப்புளங்கள் மற்றும் தடித்த வெண்ணிற தோல் என்பன எதன் அறிகுறிகளாகும்?

4. நக வெளிறலிற்கான வழமையான உயிர்ப்பான காரணி எது?

5. தொடர்ச்சியாக உலர்தலினை விலக்கும் படை யாது?

6. அதிகூடிய சதவீதத்தில் எதனை கொண்டுள்ள லோஷன் ஆனது உலர்வான தோலிற்கு பயன்படுத்தப்படுவதை தவிர்க்க வேண்டும்?

7. கட்புருவங்களை ரிவீஷிங் செய்ய வேண்டிய சரியான திசை யாது?

8. செயற்கை நகங்களின் பயன்பாடு ஒன்றினை தருக?

9. வாடிக்கையாளர் ஒருவரின் முகத்திற்கு ஒப்பனை மேற்கொள்வதற்காக வருகைதந்துள்ள அவர்/ அவள் எதிர்பார்க்கும் முக்கியமான தேவைப்பாடு யாது?

10. அழகுக்கலை நிலைய சூழல் பாதுகாப்பின் பொருட்டு கருத்திற் கொள்ள வேண்டிய 02 விடயங்களை குறிப்பிடுக?

    1.

    2.

(10 X 02 = 20 புள்ளிகள்)

11. இரசாயன உற்பத்தி பொருட்களை பயன்படுத்தும் போது முக்கியமாக கருத்திற் கொள்ள வேண்டிய 04 விடயங்களை தருக? (04 புள்ளிகள்)

    1.

    2.

    3.

4.

12. வாடிக்கையாளர் ஆலோசனைப்படிவத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய 05 தகவல்களை குறிப்பிடுக? (05 புள்ளிகள்)

1.

2.

3.

4.

5.

13. தோலின் குறுக்குவெட்டு முகத்தினை வரைந்து பெயர் குறிப்பிடுக?

(08 புள்ளிகள்)

14. நகத்தின் குறுக்குவெட்டு முகத்தினை வரைந்து பெயரிடுக?

**(08 புள்ளிகள்)**

## பகுதி C

**கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திற்கும் மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்து அதற்குரிய ஆங்கில எழுத்தினை உரிய கூட்டினுள் எழுதுக.**

| | வாக்கியம் | | | விடை |
|---|---|---|---|---|
| 1 | சீபச் சுரப்பியின் மிகையான செயற்பாடு காரணமாக அதிகளவில் உற்பத்திசெய்யப்படுவது | ☐ | a | நீள்வட்ட வடிவம் |
| 2 | ஓர் முட்டை Face pack ஆனது பயன்படுத்தப்படுவது துளைகளை திறப்பதற்கும் மற்றும் எதற்காகவும்? | ☐ | b | நேரோட்டம் |
| 3 | corrective தோல் மேக்கப் இனை மேற்கொள்ளும் போது எதிர்பார்க்கப்படுவது முதன்மையான நோக்கமானது முகத்திற்கு வடிவம் ஒன்றினை வழங்குவதற்காகும் | ☐ | c | ரிங்கிள்ஸ் (Wrinkles) |
| 4 | அடிப்படை மேக்கப் இன் சரியான பிரயோகம் மறைப்பதற்கு உதவுவது | ☐ | d | தோலில் இறுக்கத்தினை ஏற்படுத்துவதற்கு |
| 5 | கட்புருவத்திற்கு மேலே காணப்படும் அநாவசியமான முடிகளை அகற்றுவதற்கு பயன்படுத்த வேண்டியது | ☐ | e | அனுபவம் அற்ற நிலைமை |
| 6 | இரசாயன பொருள் (Depilatory) ஒன்றினை பயன்படுத்துவதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டியது | | f | ரிவீஷர் (Tweezer) |
| 7 | ஓர் திசையிலான மாறாத மின்னோட்டமானது அழைக்கப்படுவது | ☐ | g | தோல்வி |
| 8 | பேஷியல் மற்றும் ஸ்கால்ப் ஸ்ரிமர் என்பன பயன்படுத்தப்படுவது | ☐ | h | ஈரலிப்பு மற்றும் மாறாத வெப்பநிலையினை பேணுவதற்கு |
| 9 | வியாபார புறக்கணிப்பு மற்றும் கவனயீனமான கணக்கீடுகள் ஆகியனவற்றினை கொண்டுள்ள சலூன் | ☐ | i | வெற்றியடைதல் |
| 10 | அழகுக்கலை நிலையத்தில் முகாமைத்துவத்தின் பலவீனங்களிற்கு காரணமாக அமைவது | ☐ | j | தோல் மென்மையடைதல் |
| | | | k | தோற் பரிசோதனை |
| | | | l | சீபம் |

**(10 புள்ளிகள்)**